**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 1/2024**
**இன்**
**அசல் வழக்கு எண். 54/2022**

சுரேஷ்கண்ணன் ...... மனுதாரர்/வாதி

**/ எதிர் /**

1.வணங்காமுடி .....1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி
2.ஆர்.லெனின்
3.சிவகங்கை மாவட்ட ஆட்சியர்
4. சார்–பதிவாளர், மானாமதுரை ..... எதிர்மனுதாரர்கள்/
சேர்க்கப்பட வேண்டிய 2–4 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 19.09.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஹபீபுர் ரஹ்மான் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரார் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 3, 4ம் எதிர்மனுதாரார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்/வாதி தரப்பில் சிபிசி ஆர்டர் 1 ரூல் 10 (2) மற்றும் பிரிவு 151–ன் படி 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டி அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்துக்களைப் பொருத்து 1ம் எதிர்மனுதாரர் பந்தக பராதீனங்கள் செய்து அது

சம்பந்தப்பட்ட பத்திரங்களை பதிவு செய்யக்கூடாது என்று தான் வழக்கறிஞர் மூலமாக கடந்த 07.09.2022ம் தேதி வழக்கில் சேர்க்கப்பட வேண்டிய 4ம் பிரதிவாதிக்கு நோட்டீஸ் அனுப்பியதை அவர் பெற்றுக்கொண்டு யாதொரு பதிலும் அனுப்பவில்லை என்றும், இந்நிலையில் தாவா சொத்துக்களைப் பொருத்து கிரையம் பெற்றிருப்பதாக மனுவில் கண்ட 2ம் எதிர்மனுதாரர் பிரஸ்தாபம் செய்ததால் தான் நகல் எடுத்துப்பார்த்ததில், வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்களைப் 12.01.2023ம் தேதியிட்ட கிரயப்பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளது போல் மலரணையாக ஆவண எண்.142 ஆக பதிவு செய்துள்ள விபரம் தனக்கு தெரியவந்ததாகவும், இது சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 52ன் படி நிலைநிற்கக் கூடியதில்லை என்றும், 2 முதல் 4 வரை எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர்கள் என்றும், அவர்களையும் இவ்வழக்கில் சேர்க்கப்படவேண்டும் என்றும், மேற்படி கிரயப்பத்திரத்தை ரத்து செய்து கொடுக்க வேண்டும் என்று 2, 4 எதிர்மனுதாரர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் வழக்கறிஞர் மூலமாக கடந்த 24.02.2024ம் தேதி நோட்டீஸ் அனுப்பியதை பெற்றுக்கொண்டு யாதொரு பதிலும் அனுப்பவில்லை என்றும், எனவே 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்த தாவா மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **2 எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

தாவா சொத்தை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து கடந்த 12.01.2023ம் தேதி தான் கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், இந்த விபரம் மனுதாரர் / வாதிக்கு நன்கு தெரியும் என்றும், தான் கிரையம் வாங்கிய விவரம் தெரிந்திருந்தும் அப்போதெல்லாம் தாவா வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்காமல், தற்போது தன்னை தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்துள்ள தாவா மனுவும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடிது என்றும், தாவா வழக்கிற்கு தான் அவசியமற்ற நபர் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

தாவாச் சொத்தில் மனுதாரர் உண்மையான அனுபவ உரிமை அல்லது பொது பாத்திய உரிமை இருந்திருந்தால் பத்திரப்பதிவு

செய்வதற்கு மறுப்பு தெரிவித்து வில்லங்கம் குறித்து மனு கொடுத்திருக்கலாம் என்றும், அதை தாங்கள் செயல்படுத்தவில்லை என்றால் மாவட்ட பதிவாளரிடம் மேல்முறையீடு செய்திருக்கலாம் என்றும், மனுதாரருக்கு தாவா சொத்தில் முழுபாத்திய உரிமை சித்தித்துள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பு பிறப்பிக்கவில்லை என்றும், அப்படி இருக்கும் போது மனுதாரர் எவ்வித முயற்சியும் ஏற்படுத்தாமல் மோசடி பதிவு செய்ததாக குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், தாவா வழக்கில் தங்களை எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும், வழக்கு விசாரணையை காலம் கடத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், பத்திரப்பதிவாளருக்குள்ள அதிகாரம் மற்றும் பதிவு சட்டத்தின் படி தான் 4ம் Proposed எதிர்மனுதாரர் செயல்படுவாரே தவிர எந்தவிதமான விதிமீறலோ அல்லது ஒருதலை பட்சமாகவோ செயல்படமாட்டார் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு இல்லை.

**<u>6. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :–</u>**

**6.1.** மனுதாரார்/வாதி, பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது, தாவா சொத்தை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி விற்பனை செய்யக்கூடாது என்று 4ம் Proposed எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பியும், Proposed 2ம் எதிர்மனுதாரருக்கு 12.01.2023ம் தேதிய கிரைய பத்திரம் மூலம் தாவா சொத்தை மாற்றம் செய்துள்ளதாகவும், அவரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து, அவரையும் கட்டுப்படுத்தி தீர்ப்பு பெறுவது அவசியம் என்றும், எனவே மனுவில் கண்ட Proposed 2 முதல் 4 எதிர்மனுதாரர்களையும் வழக்கில் சேர்த்து வழக்கு நடத்த வேண்டும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும் படியாகவே உள்ளது.

**6.3.** 2ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தாவா சொத்தை தான் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியிடமிருந்து கடந்த 12.01.2023ம் தேதியன்று கிரையம் வாங்கியுள்ளேன் என்றும், தாவா சொத்தை பொறுத்து வழக்கு நடைபெறும் விசயம் தனக்கு தெரியாது என்றும் தெரிவித்துள்ளார்.

**6.4**. 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து, 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை பொறுத்து கிரையம் வாங்கிய ஆவணம் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6.5.** 3ம் எதிர்மனுதாரர் அரசுக்காக சேர்க்கப்பட்டுள்ளார். 4ம் எதிர்மனுதாரர் மானாமதுரை சார்பதிவாளர் அவரது அலுவலகத்தில் பதிவு வேலை நடப்பதால் 3, 4 எதிர்மனுதாரர்கள் Formal party–ஆக சேர்க்கப்பட்டுள்ளனர்.

**6.6**. எனவே வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தை கிரையம் வாங்கிய நபரையும் சேர்த்து வழக்கு நடத்தினால் தான் அனைத்து தரப்பினர்களின் நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என்றும், மேலும் தரப்பினர்களுக்கிடையே வழக்குகள் பெருகுவதை (**Multiplicity of Proceedings**) தவிர்க்கும் பொருட்டும், இம்மனு செலவுத் தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 செப்டம்பர் மாதம் 26ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.09.26 18:24:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர் தரப்பில் சாட்சிகள் –** இல்லை

**<u>மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.10.1974 | கிரையப்பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.2 | 31.07.2000 | பட்டா மாறுதல் உத்தரவு நகல் |
| ம.சா.ஆ.3 | 14.11.2008 | அய்யாச்சாமி பெயரிலுள்ள 10(1) கணிணி பட்டா நகல் |
| ம.சா.ஆ.4 | 21.02.2007 | இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.5 | 25.11.2018 | சுரேஷ்கண்ணன் பெயரிலுள்ள 10(1) கணிணி பட்டா நகல் |
| ம.சா.ஆ.6 | 07.12.2018 | கிரையப்பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.7 | 21.12.2018 | மனுதாரர், மானாமதுரை தாசில்தாருக்கு அனுப்பிய கடிதம் நகல் |
| ம.சா.ஆ.8 | 07.09.2022 | மனுதாரர், 4 ம் உத்தேச பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் |
| ம.சா.ஆ.9 | 12.01.2023 | 1 ம் எதிர்மனுதாரர், 2 ம் உத்தேச மனுதாரருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் இணையதள நகல் |
| ம.சா.ஆ.10 | 07.09.2022 | மேற்படி நோட்டீஸ் அனுப்பியதற்கான போஸ்டல் ரசீது |
| ம.சா.ஆ.11 | -- | மேற்படி நோட்டீஸ் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை |
| ம.சா.ஆ.12 | 24.02.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| ம.சா.ஆ.13 | 24.02.2024 | மேற்படி அறிவிப்பிற்கான அஞ்சல ரசீதுகள் (5) அசல் |
| ம.சா.ஆ.14 | --- | அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (4) அசல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் –** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.09.26 18:24:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.1/2024**
**in**
**OS. No. 54/2022**

**Dated: 26.09.2025**